RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI:10.34256/irjt21s244

# இளங்கோவடிகள் கட்டமைக்கும் இறைக்கோட்பாடு

கு.சுதாகர் [அ, *]

[அ] தமிழ்த்துறை, து.கோ. வைணவ கல்லூரி,அரும்பாக்கம், சென்னை-600106, தமிழ்நாடு, இந்தியா.

# The theory of Theosophical Structure of Ilango Adigal

K. Sudhakar [a, *]

[a] Department of Tamil, DG Vaishnav College, Arumbakkam, Chennai-600106, Tamil Nadu, India

* Corresponding Author: ksivasudhakar1981@gmail.com

Received: 04-01-2021
Revised: 14-04-2021
Accepted: 25-04-2021
Published: 30-04-2021

## ABSTRACT

The gods worshipped by the three kings of The Ilango Adigal period and the deities worshipped by various tribes and the rituals performed by them without any discrimination. Kannagi worship is an expression of the attempt to build or advance a common deity in the Tamil community, which is based on different theories and principles of Jainism, Buddhist and Vaideekam religions. The purpose of this article is to bring out the theory of the divine theory that the Ilango Adigal are trying to build from the beginning to the end of the Silappadikaram. The purpose of this article is to express the theory of the sculpture spearheaded by the Ilango Adigal by attempting to build kannagi as the deity of the entire Tamil Nadu, which is the alternative to Jainism, Buddhist and Vaideekam religions, but also created kannagi as an epic in tamil land (Worshipping Kannagi in Tamil Nadu as Mari worship in Tamil Nadu, Bhagwati worship in Kerala and Kannagai).

**Keywords:** Kannagi, Mari, Bhagwati, Ilango Adigal, Jainism, Buddhist, Vaideekam.

## முன்னுரை

தமிழின் தனித்துவமிக்க படைப்பான சிலப்பதிகாரம் மக்களின் வாழ்வியலையும் வரலாற்றையும் கூறும் மிக முக்கியமானதோர் ஆவணமாகத் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது. இளங்கோவடிகள் கண்ணகியின் கதையை எடுத்துக்கொண்டு தமிழ்ச் சமூகம் முழுமையையும் ஒன்றிணைக்கும் முயற்சியை மேற்கொண்டார் என்றே கூறலாம். தம் காலத்தில் நிலவிய எல்லாச் சமயங்களையும் பாரபட்சமின்றி பாடிய புலவன் இளங்கோவடிகளே. தமிழ் இலக்கியங்களில் பக்தியைப் பாடுவதும் பக்திக்காகவே இலக்கியங்கள் படைக்கப்படுவதும் நம் பண்பாட்டில் தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்து வந்துள்ளதை/ வருவதை நம்மால் காண முடிகிறது. அவ்வகையில் பக்தியை ஒரு சார்பாக பாடாது பொதுமை நோக்கில் பாடிய இளங்கோவடிகளின் குணநலம் போற்றுதலுக்குரியது.

தம் காலத்தில் வாழ்ந்த மூவேந்தர்களால் வழிபடப்பட்ட தெய்வங்களையும் பல்வேறு இனக்குழு மக்களால் வழிபடப்பட்ட தெய்வங்களையும் கருத்தில் கொண்டு பல்வேறு சமயங்களையும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட சடங்குகளையும் எவ்வித பாரபட்சமுமின்றி காப்பியத்தில் இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்.

சமணத்துறவியாக இருப்பினும் வைதீக சமயங்கள் பற்றிய விரிவான அறிவு அவருக்கு இருந்தமையைப் பற்றி கூறும் சொக்கன், இளங்கோவடிகள் ஆளுமையானது, அவரின் கவித்துவத்தால் மட்டுமின்றி அவருடைய தியாகப் பண்பு, சகலகலா வல்லமை, தமிழ் வடமொழி அறிவு, சமய ஞானம்

என்ற பன்முகங்களையும் கொண்டு உருவானது(2001:5) என்று குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது (Chokkan, 2001). வைதீக சமயங்களை நன்கு அறந்திருந்தாலும் அவ்வைதீக மரபிற்குள் கண்ணகியை நுழையவிடாமல் தமிழ்த் தெய்வ அடையாளத்திற்குள் படைக்க முயன்றிருப்பதை தேவந்தி சோமகுண்டம், சூரிய குண்டம் மூழ்கிவர அழைத்தபோது கண்ணகி 'பீடன்று' என்ற ஒரே சொல்லால் மறுத்துவிடுகிறாள். புண்ணிய தீர்த்தத்தில் முழுகுதல், கோட்டம் வழிபாடு செய்தல் போன்றவை வைதீக கோட்பாடுகள் கணவனை மட்டும் வணங்குதலே தமிழர் கோட்பாடு. அவ்வகையில் வைதீகத்தின் தாக்கத்தைத் தமிழ்க் கோட்பாடு எதிர்த்து நிற்பதை சிலம்பில் காணமுடிவதாகக் (2002:121) கோ. பிலவேந்திரன் குறிப்பிடுகின்றார் . இப்புலத்திலேயே வைதீக சமயநெறிக்கும் அதற்கு உட்பட்ட பெருந்தெய்வ வழிபாட்டு நெறிக்கும் மாற்றாக கண்ணகி எனும் தெய்வம் படைக்கப் பட்டிருப்பதாகத் (2015:140) தி. சு. நடராசனும் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது (Natarajan, 2015).

தமிழ்ச் சமூகத்தில் வெவ்வேறு கோட்பாட்டாலும் கொள்கையாலும் அமைந்துள்ள சமண, பௌத்த, வைதீக சமயத்தவர் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளும் வகையில் பொதுமையான தெய்வம் ஒன்றைக் கட்டமைக்க அல்லது முன்னெடுக்க முயன்றதின் வெளிப்பாடே கண்ணகி வழிபாடு எனலாம். அவ்வகையில் சிலப்பதிகாரத்தின் தொடக்கம் முதல் நிறைவு வரை இளங்கோவடிகள் கட்டமைக்க முயலும் இறைக்கோட்பாட்டை வெளிக்கொண்டு வருவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## இளங்கோவின் சமயப்பொறை

இளங்கோவடிகள் தம் காலத்தில் வழக்கிலிருந்த எல்லாச் சமயங்களையும் அதன் வழிபாட்டு நெறிமுறைகளையும் நன்கு அறிந்திருந்தார் என்பதற்கு சிலப்பதிகாரமே சான்று. இளங்கோ காட்டும் தமிழகத்தில் பலநிலை மக்களும் ஏத்திய இறை நெறிகளை எல்லாம் சரிநிகர் சமானமாகவே குறிப்பிடுகின்றார். சிவன், கொற்றவை, முருகன், திருமால் போன்றோரின் பெருமையினைப் பாடுகிறார். நெய்தல் தெய்வத்தைக் கானல் வரியிலும் மருதநிலத்தின் தெய்வமான இந்திரனின் விழாவினைப் புகார்க் காண்டத்தில் விரிவாகப் பாடுகிறார். தமிழர் வடவர்களை வென்றாலும் கூட அவர்களின் வைதீக, ஆசீவக, சமண, பௌத்த சமயங்கள் தமிழரை வென்று விட்ட திறனைக் குறிப்பாக உணர்த்துவதாகச் (1972:14) சோ.ந கந்தசாமி குறிப்பிடுகின்றார் (Kandasamy, 1972). மேலும் அருகன், புத்தன் கோட்டங்களையும் ஞாயிறு, திங்கள் முதலிய வழிபாடும் சிலம்பில் காணமுடிகிறது என்கிறார். இளங்கோவடிகள் சமணம், சைவம், வைணவம் முதலிய சமயக் கடவுளர்களைக் காப்பியக் கட்டுமானத்தோடு பிணைத்திருப்பது போலவே நாட்டுப்புறத் தெய்வங்களையும் காப்பிய இயக்கத்தோடு இணைந்துள்ளதாகக் (1993:106) க.பஞ்சாங்கம் குறிப்பிடுவதிலிருந்து செல்வாக்குப் பெற்ற சமயங்களை மட்டுமின்றி அங்காங்கே இனக்குழு மக்களால் வணங்கப்பட்டும் வழிபடப்பட்டும் வந்த தெய்வங்களையும் கவனத்தில் கொண்டு பாடியுள்ளார் என்பது தெளிவாகிறது (Panchangam, 1993).

இளங்கோவடிகள் பொதுவாகச் சமணர் என்று அறிஞர்களால் கூறப்படினும் அவர் சமயங்களைக் கடந்தவர் என ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை குறிப்பிடுவதாகச் (2007:43) சந்தனா நல்லலிங்கம் எடுத்துக்காட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது (Santhana Nallalingam, 2007). காப்பியத்தில் கோவலன் சமணனாக இருந்தான் என்று கூறலாமே ஒழிய இந்நூல் சமண மதத்தைக் கூறும் நூல் அல்ல என்பது திண்ணம் (1947:65) என்று வெ.சு. சுப்பிரமணிய ஆச்சாரியாரும் குறிப்பிடுகின்றார் (Subramaniya aachariyar, 1947). அவ்வகையில் இளங்கோவடிகள் சமணராய் இருந்தும் அதனை அடையாளப்படுத்திக் கொள்ளும் முயற்சியை மேற்கொள்ளவில்லை என்றே கூறவேண்டும். அவர் எல்லாச் சமயங்களையும் ஏற்று சமய ஒருமைப்பாட்டைக் காப்பியத்தில் காட்டியுள்ளதாகக் (2006:91) கா. வாசுதேவன் குறிப்பிடுவது முற்றிலும் பொறுத்தமுடையதே (Vasudevan, 2006). அவ்வகையில் இளங்கோவடிகளிடத்தே சமயசார்பு தன்மை இல்லாதபோதும் எல்லாச் சமயங்களும் வணங்கத்தக்க தெய்வம் ஒன்றே கட்டமைக்க முயன்று காப்பியத்தின் தொடக்கம் முதலே அதற்கான சூழலை உருவாக்குவதை நாம் கண்ணகி அறிமுகத்தில் இருந்தே அறியலாம்.

## போதிலார் திருவினாள்

சேர நாட்டில் வாழும் இனக்குழு மக்களான குறவர்களால் தெய்வமாய் வழிபடப்பட்ட கண்ணகியைத் தமிழ் இனம் வாழும் அனைத்து நாட்டினருக்குமான தெய்வமாய் படைக்க முயன்றதின் வெளிப்பாடே சிலப்பதிகாரம் ஆகும். இளங்கோவடிகள் அம்முயற்சியைக் காப்பியத்தின் தொடக்கத்திலேயே கண்ணகியை அறிமுகப்படுத்தி தெய்வமாகப் படைக்க முயன்று இருப்பதை, "போதில் ஆர் திருவினாள் புகழுடை வடிவு என்றும்/ தீதிலா வடமீனின் திறம் இவள் திறம் என்றும்/ மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங் குணத்து/ காதலாள் பெயர் மன்னும் கண்ணகி"(சிலம்பு:1:26-29) என்று புகழ்ந்துரைக்கின்றார். கண்ணகியின் அழகு தெய்வீக அழகு, இறைமை அழகு(1997:6) எனச் சரளா ராஜகோபாலன் விதந்து குறிப்பிடுவதைக் காணலாம் (Sarala rajagopalan, 1997).

சிலம்பின் இறுதியில் வரும் வாழ்த்துக் காதை, வரந்தரு காதை இரண்டையும் படிக்கும்போது நாட்டார் தெய்வமாய்ப் புராணிக தெய்வமாகக் கண்ணகியை உருமாற்றுதல் எனும் நிகழ்வு திடீரென நிகழ்ந்தவையன்று முதல் காதையில் இருந்தே தொடங்கிவிட்டதாகக் கூறும் துரைசீனிச்சாமி, பன்னிரெண்டு வயதில் தெய்வத்தன்மை பொருந்தியவளாக காட்டத் தொடங்கும் கண்ணகி தான் ஆரவாரமான திருவிழாச் சூழலில் பத்தினிக் கோட்டத்தில் வானிலிருந்து அசரீரீ கூறும் மக்கள் தெய்வமாகக் காட்டப்படுகிறார் (2013:5) என்கிறார் (Durai Seenisamy, 2013). இளங்கோவடிகள் சுட்டிச்செல்லும் கண்ணகியின் தெய்வத்தன்மையைத் தேவந்தியின் வாயிலாக, 'முடிமன்னர் மூவருங் காத்தோம்புந் தெய்வ' (சிலம்பு:29:42) என்று கூறுவதையும் சாலினி மீது தெய்வமேறி, 'இவளோ கொங்கச்செல்வி குடமலை யாட்டி' (சிலம்பு:16:47) என்று கூறுவதையும் சமணத்துறவி கவுந்தியடிகள், 'கற்புக்கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்' (சிலம்பு:15:143-144) என்று கண்ணகியைத் தெய்வநிலையில் வைத்து கூறும் கூற்றுகளே சான்றாகும்.

## கண்ணகிக் கோட்டமும் இளங்கோவின் நாட்டமும்

காப்பியத்தின் அடிப்படை நோக்கம் தமிழ்த் தெய்வமாக கண்ணகியைப் போற்றுவதோடு அவளைத் தமிழ் கூறும் நல் உலகத்தை இணைக்கும் சக்தியாகக் காட்டுவதே இளங்கோவின் நோக்கமெனக் (2006:31) கா. செல்லப்பன் குறிப்பிடுகின்றார். மேலும் சிலம்பின் அடிப்படையில் பெண்மையின் இறைமை உள்ளது. கண்ணகியே மற்ற வழிபாடுகளை குறிப்பாக வைதீக வழிபாடுகளை ஏற்கவில்லை அவளே தெய்வமாக உயர்கிறாள். கொற்றவையும் திருமாலும் முருகனும் ஒவ்வொரு நிலத்துக்குரிய தெய்வமாக பேசப்பட அந்நிலங்கள் அனைத்தையும் இணைக்கும் அனைத்திலும் வழிபடப்படும் தேசிய தமிழ்த் தெய்வமாக கண்ணகி உயர்கிறாள் என்றும் குறிப்பிடுவதிலிருந்து இளங்கோவடிகள் கட்டமைக்கும் விரும்பும் இறைக் கோட்பாட்டை அறியலாம்.

சிலப்பதிகாரத்தில் சுமார் 40 இடங்களில் கோட்டம் என் சொல் வருகை அமைந்துள்ளது. காப்பிய பொருள் கூறில் தனக்கெனத் தனிப் பங்கு கொள்கிறது. காப்பியக் கதை பதிகத்தில் படைப்பாசிரியர் இளங்கோவடிகளின் துறவைக் கூறும் குணவாயில் கோட்டத்தில் தொடங்கிக் கண்ணகி கோட்டத்தில் கதை நிறைவு பெறுகிறது (2003:59) என அன்னிதாமசு கூறுகின்றார் (Annithomas, 2003). தனித்தனி கோட்டங்களாக இருந்த அனைத்திற்கும் உரியதாக ஒரே கோட்டமாகக் கண்ணகிக் கோட்டத்தை இளங்கோ முன்னெடுத்தார் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

## பத்தினித் தெய்வமெனும் வழிபாட்டுக் கொள்கை

பத்தினித் தெய்வமாக கண்ணகியைப் படைத்துப் பெண்ணினத்திற்கே பெருமை தேடித்தந்த காப்பியம் சிலப்பதிகாரம். அச்சிலப்பதிகாரத்தின் ஒவ்வொரு காண்டத்திலும் கண்ணகியின் செயல்களைக் காணுங்கால் புகார்க் காண்டத்தில் திங்களைப் போன்று குளிர்ந்திருந்து மதுரைக் காண்டத்தில் ஞாயிறென எரித்து வஞ்சிக் காண்டத்தில் மழைபோல் வரம் தந்து அமைகின்ற கண்ணகியையே மங்கல வாழ்த்துப் பாடலின் முற்பகுதியில் இயற்கை வணக்கத்தில் இளங்கோவடிகள் கூறினர்போலும் என (1980:66) அ. அறிவுநம்பி கூறுவது கவனிக்கத்தக்கது (Arivunambi, 1980).

புகாரில் அமைதியின் வடிவமாக இருந்த கண்ணகி மதுரையில் வெகுண்டெழுந்த நிகழ்வை, உலக இலக்கிய வரலாற்றிலேயே முற்றிலும் ஒரு நாட்டில் புதிய சூழலில் தன்னந்தனியளாக, கிடைக்காத நீதியின் முடியைப் பற்றி உலுக்கி வெற்றியைத் தேடிப்பெற்ற ஒரே நாயகி கண்ணகி மட்டுமே (2004:57) என்று வையவன் குறிப்பிடுவதிலிருந்து கண்ணகியின் போராட்ட குணமே காப்பியமாக மலர்வதற்கு காரணம் எனலாம் (Gurunathan, 2004). இருப்பினும் இளங்கோவடிகளின் அடிப்படை நோக்கம் கண்ணகியைத் தெய்வமாக்க வேண்டும் என்பதே எனக் கூறும் இராம. இராமநாதன், பத்தினித் தெய்வம் என்று தமிழ் மக்கள் பாராட்ட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் தான் சிலப்பதிகாரக் காப்பியத்தை உருவாக்கியுள்ளார் என்பதில் ஐயமில்லை. கதையில் வரும் உறுப்பினர்கள், நிகழ்ச்சிகள் அனைத்தும் அவர் மேற்கொண்ட தெய்வமாக்கும் புனிதப் பணிக்குத் துணையாகவே அமைகின்றன (1994:39) என்று கூறுகின்றார் (Ramanathan, 1994). இக்கருத்துக்கு வலுசேர்க்கும் விதமாய் பத்தினிப் பெண்டிரைத் தொழும் மரபு சிலம்பில் விளைந்த புதுமை (1993:135) எனக் குன்றக்குடி அடிகளாரும் குறிப்பிடுகின்றார் (Kundrakudi adikalar, 1993).

இளங்கோவடிகள் பத்தினித் தெய்வத்தைப் படைப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தாராதலால் துன்பியல், இன்பியல் சார்ந்த கிளைக்கதைகளை துணைக்கொண்டு இலக்கிய நயம் மேம்பட உரைசால் பத்தினிக்கு கோயில் அமைக்கும் பணிக்குக் காப்பியத்தை நடத்திச் செல்கிறார்(2007:56) எனச் சந்தனா நல்லலிங்கம் குறிப்பிடுகின்றார். பத்தினித் தெய்வமாக கண்ணகியைப் போற்றவேண்டி காப்பியத்தில் வரும் கதாபாத்திரங்களின் மூலமாக கண்ணகியின் பத்தினித் தன்மையை இளங்கோவடிகள் பல்வேறு தொடர்களால் சிறப்பித்துள்ளார். இதனை ஆரஞருற்ற வீரபத்தினி (பதிகம்:42, அழற்படு:155), உரைசால் பத்தினி (பதிகம்:56), ஒருமுலை குறைந்த திருமா பத்தினி (பதிகம்:5), பத்தினி கடவுள் (நீர்ப்படை:15), பலர் தொழு பத்தினி (பதிகம்:36), பலர்புகழ் பத்தினி (குன்ற:7) பலர் தொழுதேத்தும் பத்தினி (நடுகல்:210), மாபெரும் பத்தினி (காட்சி:129), வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினி(காட்சி:74) எனும் தொடர்கள்வழிக் காணலாம்.

பத்தினித் தெய்வமாம் கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவனால் ஏற்படுத்தப்பட்ட நடுகல் விழாவிற்கு வருகைபுரிந்த ஈழத்து மன்னன் கயவாகு கண்ணகியை வழிபாட்டதோடு மட்டுமல்லாது அவ்வழிபாட்டை ஈழத்துக்கும் கொண்டு சென்றான். ஈழத்தில் மிகவும் வேரூன்றி நிலைத்ததோடு சிங்கள மக்களிடையே பத்தினி வழிபாடாகவும் தமிழர்களிடையே கண்ணகி வழிபாடாகவும் மலர்ந்துள்ளது (2006:35) என்று சுகந்தி சுப்ரமணியம் குறிப்பிடுகின்றார் (Suganthi Subramaniyam, 2006). தமிழகத்திலும் கேரளத்திலும் கண்ணகி வழிபாடு பெரியளவில் மாற்றத்திற்கு உட்பட்டிருக்கும் நிலையில் கயவாகுவால் ஈழத்திற்கு கொண்டு செல்லப்பட்ட கண்ணகி வழிபாடும் ஆலயங்களும் சில மாற்றங்களுக்கு உட்பட்டு இருந்தாலும் பல பகுதிகளில் தமிழ்மரபுபடி விழாவெடுத்து வருவதையும் காணமுடிகிறது.

யாழ்ப்பாணக் குடநாட்டிலே சிறப்புற்று விளங்கிய பல கண்ணகி அம்மன் கோயில்கள் இராஜ இராஜேஸ்வரி கோவில்களாக மாற்றமடைந்து ஆகம நெறிப்பட்ட வழிபாட்டு மரபுகளுக்கு உட்பட்டபோதும் சைவசமய மறுமலர்ச்சிக்குப் பெருமளவில் உட்படாத வன்னிப் பிரதேசத்திலும் மட்டக்களப்புப் பிரதேசத்திலும் கண்ணகி அம்மன் வழிபாடு நின்று நிலைக்கும் வாய்ப்பினைப் பெற்றதாக (2003:38) எஸ். சிவலிங்கராஜா குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது (Sivalinga raja, 2003). அவ்வகையில் சிலப்பதிகாரத்தில் முன்னெடுக்கப்பெற்ற கண்ணகி வழிபாடானது தனித்துவமுடைய தமிழர் வழிபாடாக இன்றும் நிலைப்பெற்று இருப்பதின் ஊடாக இளங்கோவடிகள் கட்டமைத்த இறைக்கோட்பாட்டை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

## முடிவுரை

இளங்கோவடிகள் தம் காலத்தில் வழங்கி வந்துள்ள சமயங்களை எவ்வித பாகுபாடுமின்றி காப்பியத்தின் தேவைக்கேற்ப எடுத்தாண்டுள்ளார் என்பதை நம்மால் அறிய முடிகிறது. புகார்க் காண்டம் தொடங்கி மதுரைக் காண்டம் முடிய பல்வேறு இனக்குழு சமூகத்தினரால் வணங்கப்பட்ட தெய்வங்களையும் அவர்களது வழிபாட்டு முறைமைகளையும் கவனமாய் பதிவு செய்திருக்கிறார்.

வஞ்சிக் காண்டத்தில் பல்வேறு சமயத்தவரையும் ஒருங்கிணைக்கும் முயற்சியாக கண்ணகி எனும் பெண்ணைத் தெய்வநிலைக்கு உரியவளாக உயர்த்தி அவ்வழிபாட்டில் அனைவரும் (வேந்தர்கள், பிற நாட்டு மன்னர்கள், பல சமயத்தவர்கள்) பங்கேற்கும்படி செய்யும் செயல்பாட்டின் ஊடாக இளங்கோவடிகளின் எண்ணத்தை நம்மால் அறிந்துகொள்ள முடியும். சமண, பௌத்த, வைதீக சமயங்களுக்கு மாற்றான ஒட்டுமொத்த தமிழினத்திற்கும் உரிய தெய்வமாக பத்தினித் தெய்வமாம் கண்ணகியைக் கட்டமைக்க முயன்று அதனை காப்பியமாகப் படைத்ததோடு மட்டுமின்றி கண்ணகி வழிபாட்டைத் தமிழ் நிலமெங்கும் (தமிழ்நாட்டில் மாரி வழிபாடாகவும் கேரளத்தில் பகவதி வழிபாடாகவும் ஈழத்தில் கண்ணகை வழிபாடாகவும்) ஏற்படுத்தியதின் ஊடாக இளங்கோவடிகள் முன்னெடுத்த இறைக்கோட்பாட்டை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது. தமிழ்ச்சூழலில் பல சமயங்களுக்குள் பொதுமை நோக்கில் ஒரு சமயத்தைக் கண்ணகி வழிபாட்டின் வாயிலாக உலகிற்கு உணர்த்திய காப்பியம் சிலப்பதிகாரம் என்பது தெளிவாகிறது.

## References


Annithomas, (2003) From Silamboli to Ilango Adikal, Amuthanilayam, Chennai, India

Arivunambi, A., (1980) Koothum Silambum, Arusa press, Madurai, India

Chokkan, (2001), Literary Treasury, Thiruvalluvar press, Jaffna, Sri Lanka

Durai Seenisamy, (2013) Silapathikaram Story and Ideology, New Century book house, Chennai, India

Gurunathan, R., (2004) Silapathikaram, Palaniyappa brothers, Chennai, India

Kandasamy, S.N., (1972) Puratchikappiyam, Abirami pathippagam, Chidambaram, India

Kundrakudi adikalar, (1993) Silambu neri, Kalaivani puthagalayam, Chennai, India

Natarajan, T.S., (2015) SIlpathikaram Rereading, New Century book house, Chennai, India

Panchangam, K., (1993) A look at the reviews on Silapathikaram, Annam pathippagam, Sivagangai, India

Ramanathan, R., (1994) A new insight into silapathikaram, Agaram pathippagam, Chennai, India

Santhana Nallalingam, (2007) Ilangovin Pathini Deiva padaipu, Kanthalagam, Sri lanka

Sarala rajagopalan, (1997) Kappiya thalaiviyar, Oli pathippagam, Chennai, India

Sivalinga raja, S., (2003), Eelam Tamil Literary Cell, Kumaran book house, Sri Lanka.

Subramaniya aachariyar, V., (1947) Research on Silappathikaram, Anandapothini, Chennai, India

Suganthi Subramaniyam, (2006) Rural rituals and related songs in Batticaloa district, London Tamil Hindu council, Kumaran pathippagam, Colombo, Sri Lanka.

Vasudevan, K., (2006) History of Tamil Literature from a multifaceted perspective, Devan pathippagam, Trichy, India



**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License